சுற்றறிக்கை – 1

# தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க. எண் 007708 / டி1 / 2018, நாள் 31.05.2018

2857

பொருள் : தொடக்கக் கல்வி – பொது மாறுதல் – 2018–2019 ஆம் கல்வி ஆண்டில் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொது மாறுதல் – கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் – ஆசிரியர்கள் மாறுதலுக்கு விண்ணப்பித்தல் – சார்ந்து.

பார்வை : அரசாணை (1டி) எண் 403, பள்ளிக் கல்வித் (ப.க. 5(1)) துறை, நாள் 29.05.2018

… … …

2018–2019 ஆம் கல்வி ஆண்டில் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பார்வையில் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, பணி நிரவல், பொது மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வினை சிறப்புற நடத்திடவும், உரிய முன்னேற்பாடுகள் செய்திடவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2) பார்வையில் காணும் அரசாணையின் நகல் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு உடன் சார்பு செய்தும், அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டி வைத்து அனைத்து ஆசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3) மேலும், மாறுதலுக்கு விண்ணப்பிக்க வேண்டிய புதிய மாதிரி விண்ணப்பப் படிவம் (New Model Transfer Application Form) இச்செயல்முறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்புதிய விண்ணப்ப படிவத்திலேயே பார்வையில் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குட்பட்டு மாறுதல் கோரும் அனைத்து ஆசிரியர்களும் 01.06.2018 முதல் 07.06.2018 ஆம் தேதிக்குள் சார்ந்த தலைமை ஆசிரியரின் மூலமாக சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4) மாறுதல் கலந்தாய்வில் கலந்துகொள்ள, விண்ணப்பிக்கும் ஆசிரியர் தற்போது பணிபுரியும் பள்ளியில் 01.06.2017 ஆம் தேதிக்கு முன்னர் பணியில் சேர்ந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டும்.

5) நடுநிலைப் பளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஒன்றியம் விட்டு ஒன்றியம், கல்வி மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் பொது மாறுதல் கோரி விண்ணப்பிக்க இயலாது. மாறுதல் கோரும் பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ஒன்றியத்திற்குள், கல்வி மாவட்டத்திற்குள், வருவாய் மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் என அனைத்து மாறுதல்களுக்கும் ஒரே விண்ணப்பத்தில் தேவையான இனங்களில் ✓ செய்து விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒரு மாறுதல் ஆணை பெற்றபின் இதர கலந்தாய்வுகளில் கலந்துகொள்ள இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

6) தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், பொது மாறுதல் கோரும் விண்ணப்பங்களை 07.06.2018 ஆம் தேதிக்குள் வட்டாரக் கல்வி அலுவலரிடம் அளித்திட அறிவுறுத்தப்படுகிறது. 07.06.2018 ஆம் தேதி வரை பெறப்படும் மாறுதல் கோரும் விண்ணப்பங்களை சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலரால் கீழ்குறித்தவாறு உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் வேண்டும்.

அ) A – பதிவேட்டில் ஒன்றியத்திற்குள் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்

ஆ) B – பதிவேட்டில் கல்வி மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்

இ) C – பதிவேட்டில் வருவாய் மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்

ஈ) D – பதிவேட்டில் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்

7) மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் மற்றும் A, B, C, D – பதிவேடுகளில் உள்ள விவரங்களை சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் 07.06.2018 ஆம் தேதிக்குள் ***www.tndse.com*** என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்கள் அடங்கிய மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை நான்கு அச்சுப் பிரதிகள் (4 Copies) எடுத்து 08.06.2018 ஆம் தேதிக்குள் சார்ந்த ஆசிரியரிடம் கையொப்பம் பெற்று ஒரு பிரதியினை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலரிடமும், 2 பிரதியினைச் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரிடமும் ஒப்படைக்க வேண்டும்.

8) சிறப்பு முன்னுரிமையின் அடிப்படையில் மாறுதல் கோரும் ஆசிரியர்கள், பார்வையில் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள உரிய சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே சிறப்பு முன்னுரிமைக்குப் பரிசீலிக்கப்பட வேண்டும். முன்னுரிமை சான்றிதழை அசல் சான்றிதழுடன் ஒப்பிட்டு உண்மைத்தன்மையினைச் சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் உறுதி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சார்ந்த பிரிவு எழுத்தர், கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

9) அலகு விட்டு அலகு மாறுதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பார்வையில் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அலகு விட்டு அலகு மாறுதல் கோரும் விண்ணப்பங்களைக் கண்டிப்பாக பெறுதல் கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

10) மனமொத்த மாறுதல் விண்ணப்பங்களை பெற்று உரிய பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும். மனமொத்த மாறுதல் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

11) பொது மாறுதல்கள் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகள் அனைத்தும் இணையதள வழியில் நடத்தப்படும் எனவும் கலந்தாய்வு கால அட்டவணை பின்னர் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. பார்வையில் காணும் அரசாணையின் நகல்
2. புதிய மாதிரி விண்ணப்ப படிவம்

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 600 009 – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006 – அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006.

| | | | |
|---|---|---|---|
| ஒன்றியத்திற்குள் ☐ | கல்வி மாவட்டத்திற்குள் ☐ | வருவாய் மாவட்டத்திற்குள் ☐ | மாவட்டம் விட்டு மாவட்டம் ☐ |

**2018–2019 ஆம் கல்வியாண்டுக்கான ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் / தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் / இடைநிலை ஆசிரியர் / உடற்கல்வி ஆசிரியர் பொது மாறுதல் கோரும் விண்ணப்பம்**

(பொருத்தமானதற்கு ✓ குறியிட்டுக்காட்டுக)

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியரின் பெயர்<br>(தலைப்பெழுத்தை கடைசியில் குறிப்பிடவும்) | |
| | NAME IN ENGLISH<br>(Write in Block Letters) (Initials at End) | |
| 2. | பாலினம் | |
| 3. | கைபேசி எண் | |
| 4. | பிறந்த தேதி | |
| 5. | தற்போது பணிபுரியும் பதவியின் பெயர் மற்றும் பாடம்<br>*(பட்டதாரி ஆசிரியர் எனில் பாடம் குறிக்க)* | |
| 6. | தற்போதைய பதவியில் முதன் முதலில் நியமனம் செய்யப்பட்ட நாள் | |
| 7. | தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியேற்ற நாள் | |
| 8. | இப்பள்ளிக்கு மாறுதல் பெற்ற முறை<br><br>(பொருத்தமான ஒன்றிற்கு மட்டும் ✓ குறியிடவும்) | பொது மாறுதல் ☐<br>மனமொத்த மாறுதல் ☐<br>நேரடி நியமனம் ☐<br>பதவி உயர்வு ☐<br>நிர்வாக மாறுதல் ☐<br>பணி நிரவல் ☐ |
| 9. | தற்போது பணிபுரியும் பள்ளியின் பெயர், ஒன்றியம், கல்வி மாவட்டம், மாவட்டம் மற்றும் அஞ்சலக குறியீடு (PIN Code) | |

| | | |
|---|---|---|
| 10. | சிறப்பு முன்னுரிமையின் அடிப்படையில் மாறுதல் கோரினால் அதன் விவரம் (உரிய சான்றிதழ்கள்) இணைக்கப்படவேண்டும். சான்றிதழ் இருந்தால் மட்டுமே சிறப்பு முன்னுரிமைக்குப் பரிசீலிக்கப்படும்<br><br>(பொருத்தமான ஒன்றிற்கு மட்டும் ✓ குறியிடவும்) | 1. 01.06.2017 – க்குப் பின் கணவன்/ மனைவி விபத்திலோ அல்லது நோய்வாய்ப்பட்டோ இறந்திருந்தால் அல்லது இராணுவத்தில் வீர மரணம் அடைந்திருந்தால் (இறந்த நாள் ____________ ) ☐<br>2. முற்றிலும் கண்பார்வையற்றோர் ☐<br>3. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள் ☐<br>4. கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளி ☐<br>5. 50 விழுக்காட்டிற்கு மேல் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் ☐<br>6. 01.06.2018 அன்றைய நிலவரப்படி ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆசிரியர்களாக பணிபுரியும் இராணுவ வீரர்களின் மனைவி ☐<br>7. விதவை / 40 வயதைக் கடந்த திருமணம் செய்துகொள்ளாத முதிர் கன்னியர் ☐<br>8. 50 விழுக்காட்டிற்கு கீழ் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் ☐<br>9. 01.06.2018 அன்றைய நிலவரப்படி ஐந்தாண்டுகளுக்கு கீழ் ஆசிரியர்களாக பணிபுரியும் இராணுவ வீரர்களின் மனைவி ☐<br>10. மனவளர்ச்சி குன்றிய மற்றும் உடல் குறைபாடுடைய குழந்தையின் பெற்றோர் ☐<br>11. ஒரே இடத்தில் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் மற்றும் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள் ☐<br>12. கணவன் / மனைவி மைய / மாநில அரசு அலுவலகம் / அரசு சார்ந்த அலுவலகம் / அரசு / உதவி பெறும் பள்ளியில் பணிபுரிவர்கள் ☐ |
| 11. | விண்ணப்பதாரர் பணிபுரியும் இடத்திலிருந்து கணவன் / மனைவி பணிபுரியும் மாவட்டம் மற்றும் இடத்தின் தூரம் (கி.மீ.) | |

## ஆசிரியரின் உறுதி மொழி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். நான் கோரும் இடத்திற்கு மாறுதல் வழங்கும்பட்சத்தில் எவ்வித மாறுதல் பயணப்படியும் கோரமாட்டேன் என உறுதி அளிக்கிறேன்.

இடம் :

ஆசிரியர் கையொப்பம்

நாள் :

## சான்று

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் சார்ந்த ஆசிரியர் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாள், தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியில் சேர்ந்த நாள், மற்றும் மனமொத்த மாறுதல் / விருப்ப மாறுதல் / பதவி உயர்வின் மூலம் மாறுதல் / நிர்வாக மாறுதல் ஆகியவற்றை பள்ளி ஆவணங்களோடு ஒப்பிடப்பட்டு சரியாக உள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது.

நாள் :

தலைமையாசிரியரின் கையொப்பம்

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் சார்ந்த ஆசிரியரின் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிடப்பட்டு சரியாக உள்ளது என்றும் அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைபணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(a) மற்றும் 17(b)–ன் படி எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்றும் சிறப்பு முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டது என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

நாள் :

வட்டாரக் கல்வி அலுவலர்

## ஆசிரியரின் உறுதி மொழி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். நான் கோரும் இடத்திற்கு மாறுதல் வழங்கும்பட்சத்தில் எவ்வித மாறுதல் பயணப்படியும் கோரமாட்டேன் என உறுதி அளிக்கிறேன்.

இடம் :

ஆசிரியர் கையொப்பம்

நாள் :

## சான்று

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் சார்ந்த ஆசிரியர் முதன்முதலில் பணியில் சேர்ந்த நாள், தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியில் சேர்ந்த நாள், மற்றும் மனமொத்த மாறுதல் / விருப்ப மாறுதல் / பதவி உயர்வின் மூலம் மாறுதல் / நிர்வாக மாறுதல் ஆகியவற்றை பள்ளி ஆவணங்களோடு ஒப்பிடப்பட்டு சரியாக உள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது.

நாள் :

தலைமையாசிரியரின் கையொப்பம்

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் சார்ந்த ஆசிரியரின் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிடப்பட்டு சரியாக உள்ளது என்றும் அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைபணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(a) மற்றும் 17(b)–ன் படி எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்றும் சிறப்பு முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டது என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

நாள் :

வட்டாரக் கல்வி அலுவலர்